பக்கங்கள் 14+6

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 சித்திரை 07 சனிக்கிழமை 20.04.2024 அதிர்வு 264

அதிக வெப்பத்தால்

## திருமலையில் ஒருவர் மயங்கி வீழ்ந்து மரணம்

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை, மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியவெளி குளம் வயலில் வேலை செய்து கொண்டிருந்த 04



ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில்

# இதுவரையில் வெளியாகாத 8 தகவல்கள்

சி.ஐ.டியிடம் நேரில் தெரிவித்தேன் என

அருட்தந்தை காமினி அதிரடி அறிவிப்பு



"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் இதுவரையில் வெளிவராத 8 விடயங்கள் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு நேற்று வாக்குமூலமாக வழங்கினேன்." 04



## முதலை கடித்து முதியவர் சாவு!

வாழைச்சேனையில் சோகம்

முதலை கடித்த நிலையில் முதியவர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொண்டுகள்சேனை பகுதியில் நேற்று இடம் பெற்றுள்ளது.

காலாந்தனைப் பகுதியைச் சேர்ந்த 71 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான நபரே முதலை கடித்து உயிரிழந்துள்ளார். 04

## பொத்துவில் கடலில் மூழ்கி சிறுவன் மாயம்



அம்பாறை, பொத்துவில் பகுதி கடலில் நீராடிய சிறுவன் ஒருவன் நீரில் மூழ்கி காணாமல்போயுள்ளார் என்று பொத்துவில் பொலிஸார் தெரிவித்தனர்.

பொத்துவில் பகுதியைச் சேர்ந்த 15 வயது சிறுவனே இன்று இவ்வாறு காணாமல்போயுள்ளார்.

மேற்படி சிறுவன் கடலில் நீராடிக் கொண்டிருக்கும்போது திடீரென நீரில் மூழ்கி காணாமல்போயுள்ளார் என்று பொலிஸார் குறிப்பிட்டனர். 04

## மைத்திரிபாலவுடன் நீதி அமைச்சர் வலம் வருவதற்குக் கடும் எதிர்ப்பு!

துமிந்த எம்.பி. போர்க்கொடி





உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் உட்பட நீதிமன்றத்தில் பல வழக்குகளை எதிர்கொண்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அழைப்பையேற்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ 04







# இலங்கை மக்களின் காவலனாக வாழ்ந்த தெவரப்பெரும! இறுதி நிகழ்வில் அலையெனக் குவிந்த மக்கள் வெள்ளம்!!

வாழும்போது ஒருவன் எப்படி வாழ்ந்தார் என்பதை அவரது இறுதி நிகழ்வில் கண்டுகொள்ளலாம் எனப் பலர் கூறுவதுண்டு. அந்தக் கூற்றுக்குச் சான்றாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் பாலித தெவரப்பெருமவின் இறுதி நிகழ்வு அமைந்துள்ளது.

வாழும் காலத்தில் மக்களுக்காகப் பல சேவைகளைச் செய்த அரசியல்வாதிகளில் பாலித தெவரப்பெருமவும் ஒருவராவார். கொரோனா காலத்தில் மட்டுமல்லாது, வடக்கில் வெள்ளம் வந்தபோதும் தானே களத்தில் இறங்கி மக்களுக்காகச் சேவையாற்றியவர் தெவரப்பெரும. அவரது அகால மரணம் மூவின மக்களையும் துயரில் ஆழ்த்தியுள்ளது.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் பாலித தெவரப்பெருமவின் இறுதிக் கிரியைகள் நேற்றுப் பிற்பகல் அரச மரியாதையுடன் நடைபெற்றது.



அவரின் இறுதிக்கிரியைகள் பெருந்திரளான மக்களின் பங்கேற்புடன் நேற்று பிற்பகல் 2 மணியளவில் ஆரம்பமானது. இறுதி அஞ்சலி நிகழ்வின்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உட்பட உயர்மட்ட அரசியல்வாதிகள் அனைவரும் கலந்துகொண்டனர்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் சடலத்துடன் அடக்கம் செய்யும் இடம் வரை கலந்துகொண்டு கண்ணீருடன் அஞ்சலி செலுத்தினர்.

பாலித தெவரப்பெரும வாழும் காலத்திலேயே மூவின மக்களுக்காக வாழ்ந்த அரசியல்வாதியாகப் போற்றப்பட்டார். அவரின் சமூகச் செயற்பாடுகள் தொடர்பான பல்வேறு காணொளிகள் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு வருகின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியில் நீண்டகால அரசியல்வாதியாக இருந்த பாலிதவுக்கு ஏனைய அரசியல்வாதிகள் போன்று பெருந்தொகை சொத்துக்கள் எதுவும் இல்லை. ஆனால், விலைமதிப்பற்ற மக்களின் மனங்களை வென்ற அரசியல்வாதியாக அவர் இருந்துள்ளார்.

22 வருடங்களுக்கும் மேலான மக்கள் நட்புறவான அரசியல் பயணத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ள பாலித தெவரப்பெரும, மக்கள் மனதில் பல மறக்க முடியாத நினைவுகளை விட்டுச் சென்றுள்ளார் என்று இறுதி நிகழ்வில் கலந்துகொண்ட பலர் கூறியுள்ளனர்.





# கல்முனை என்பது தமிழரின் தாயகம்!

## முன்னாள் எம்.பி. கோடீஸ்வரன் சூளுரை



(வி.ரி.சகாதேவராஜா)

"கல்முனை என்பது தமிழர்களின் தாயகம், தமிழர்களின் அடையாளம். அதனை யாரும் மறந்துவிட முடியாது. நீங்கள் மறக்கவும் கூடாது."

– இவ்வாறு அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன், நற்பிட்டிமுனையில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

"கல்முனையில் எமது நிலத்தை இழந்தால் எமது அடையாளமே போய்விடும். யாருக்காகவும் அதனை விட்டுக்கொடுக்ககூடாது. பறிகொடுத்தால் அடையாளம் பறிபோய்விடும்." – என்றும் அவர் குறிப்பிட்டார்.

நற்பிட்டிமுனை சூப்பர் ஸ்டார் விளையாட்டுக் கழகத்துக்கான சீருடை வழங்கும் நிகழ்வு விளையாட்டுக் கழகத் தலைவர் ஐ.கமல்ராஜ் தலைமையில் நடைபெற்றபோது மேற்கண்டவாறு கோடீஸ்வரன் கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

"பிரதேச செயலகம் என்பது தமிழர்களின் அடிப்படை உரிமையாக இருக்கின்றது. எமது அடையாளத்தைப் பாதுகாப்பதில் இடம் முக்கியமானது.

எமக்கான அடையாளம் இருக்க வேண்டுமாக இருந்தால் எமது இடம் பறிபோகக் கூடாது. இதை விட்டால் நாளை கல்முனையில் தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்ற அடையாளமே இல்லாமல் போய்விடும்.

30, 40 வருடங்களுக்கு முன் தள்ளிப் பார்ப்போமானால்கல்முனைப் பிரதேசம் எல்லாம் தமிழர்களின் பிரதேசமாக இருந்தது. கல்முனைக்குடி என்று அன்று இருந்தது. இன்று கல்முனையாக மாறி இருக்கின்றது. இவையெல்லாம் எமக்கு எதிரான திட்டமிட்ட சூழ்ச்சிகள்.

உண்மையில் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தொடர்பாக முதன் நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்தவன் நான்தான். ஐக்கிய நாடுகள் சபையின் 51ஆவது கூட்டத் தொடரிலே பிரச்சினையை முன்வைத்தவனும் நானே. இதை யாரும் மறுக்க முடியாது.

வெகுவிரைவில் இது விடயம் தொடர்பாக ஜனாதிபதியோடும் பிரதமரோடும் நாங்கள் பேச இருக்கின்றோம். நிபந்தனையோடு எமது ஆதரவை வழங்குவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

எமது பிரதேச செயலகத்துக்கு என்னென்ன அதிகாரங்கள் இருக்க வேண்டுமோ அவற்றையெல்லாம் தர வேண்டும் என்று நாங்கள் நிபந்தனை விதிக்க இருக்கின்றோம். அதுமாத்திரமல்ல ஏலவே ஆளணியின்படி கணக்காளர் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அவர் வரவில்லை. திட்டமிட்ட சதி நடக்கின்றது. அதனால் அது இழுபடுகின்றது.

அந்தச் சூழ்ச்சிகளையெல்லாம் நாங்கள் ஒன்றாகி முறியடிக்க வேண்டும். அதற்காக உங்களது ஒத்துழைப்பும் தேவை." – என்றார்.



# மச்சான் பாலித நானும் விரைவில் வருகிறேன்!

## யமனிடம் கூறு என்று மேர்வின் உருக்கம்





“மச்சான் பாலித தெவரப்பெரும! என்னைத் தனியாகத் தவிக்கவிட்டு சென்றுவிட்டாய். மேர்வின் சில்வாவையும் உன்னிடம் அழைத்து வருமாறு யமனிடம் கூறு. நானும் விரைவில் வருகின்றேன்.”

– இவ்வாறு முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்தார்.

அமரர் பாலித தெவரப்பெருமவின் பூதவுடலுக்கு நேற்று அஞ்சலி செலுத்திய பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு உருக்கமாகக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ”நானும், பாலித தெவரப்பெருமவும் ஒரு தாயின் பிள்ளைகள் போலவே பழகினோம். இந்நிலையில், என்னைத் தனிமைப்படுத்திவிட்டு அவர் சென்றுவிட்டார். சில திட்டங்களை முன்னெடுக்கத் திட்டமிட்டிருந்தோம். ஆனால், மச்சான் பாலித என்னை விட்டு சென்றுவிட்டார். உன்னைத் தேடி நானும் விரைவில் வருவேன். அதுவரை காத்திரு. அவ்வாறு காத்திருக்க முடியாவிட்டால், மேர்வின் சில்வாவையும் விரைவில் கொண்டுவந்து தா என யமனிடம் கூறு.

நானும், பாலிதவும் மட்டுமே மரணிப்பதற்கு முன்னரே கல்லறைகளை அமைத்துக்கொண்டவர்கள். நான் மயானத்தில் அமைத்தேன். பாலித வீட்டுத் தோட்டத்தில் அமைத்தார்.” – என்றார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### முதலை கடித்து...

பொன்டுகள்சேனை நீரோடையில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது, முதலை கடித்து நீருக்குள் இழுத்துச் சென்றதால் அந்த நபர் மரணமடைந்துள்ளார் என்று பொலிஸாரின் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

மரணமடைந்த நபரின் உடலை மரண விசாரணை அதிகாரி ரமேஸ் நேரில் சென்று பார்வையிட்டதுடன் வைத்திய பரிசோதனைக்காக உடலை வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்குமாறும் உத்தரவிட்டார்.

### பொத்துவில்...

இதையடுத்துப் பொலிஸார், கடற்படையினர், உயிர்காக்கும் பிரிவினர் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து காணாமல்போன சிறுவனைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

### மைத்திரிபாலவுடன்...

நிகழ்வுகளில் பங்கேற்பது ஏற்புடையது அல்ல என்று நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில்நடைபெற்றகூட்டமொன்றில்சிறப்புப் பேச்சாளராக விஜயதாஸ ராஜபக்ஷ பங்கேற்றிருந்தார். ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அம்மையாரின் ஜனன தின நிகழ்விலும் மைத்திரிபால சிறிசேனவுடன் வருகை தந்து அவர் அருகில் அமர்ந்திருந்தார்.

இந்நிலையிலேயே சுதந்திரக் கட்சியின் உறுப்பினரான துமிந்த திஸாநாயக்க இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

“ஆளுங்கட்சி பக்கம் இருப்பதால்தான் நிமல் சிறிபால டி சில்வா, மஹிந்த அமரவீர உள்ளிட்டவர்கள் கட்சியின் இருந்து நீக்கும் முடிவை மைத்திரிபால சிறிசேன எடுத்தார். ஆனால், அரசில் அமைச்சுப் பதவியை வகிக்கும் விஜயதாஸ ராஜபக்ஷ சிறப்புப் பேச்சாளராக அழைக்கப்படுகின்றார். இதில் உள்ள நியாயத்தன்மை என்ன?

மைத்திரிபால சிறிசேனவுக்கு உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் குறித்து மட்டும் 400 வரையான வழக்குகள் உள்ளன. அண்மையில்கூட சர்ச்சைக்குரிய கருத்தை வெளியிட்டு சிக்கலில் மாட்டினார். இவ்வாறு நீதிமன்றத்தில் பல வழக்குகள் உள்ள நபரின் அழைப்பையேற்று நீதி அமைச்சர் நிகழ்வுகளில் அதுவும் அவருடன் பங்கேற்பது ஏற்புடையதா? இதனால் நீதியின் நம்பகத்தன்மை குறித்து மக்கள் மத்தியில் சந்தேகம் எழக்கூடும்.

விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு மக்கள் மத்தியில் வரவேற்பு உள்ளது. எனவே, அவர் இப்படியான நடவடிக்கையில் ஈடுபடக்கூடாது.” – என்றார்.

### திருமலையில் ஒருவர்...

ஒருவர் இன்று மதியம் மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

மூதூர் – பாலத்தடிச்சேனை கிராமத்தில் வசித்து வரும் 3 பிள்ளைகளின் தந்தையான சூரியமூர்த்தி சுதாகரன் (வயது 52) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மயங்கி வீழ்ந்த அவர், உடனடியாக மூதூர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

மூதூர் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள சடலம், உடற்கூற்றுப் பரிசோதனைக்காக திருகோணமலை வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

நாட்டில் தற்போது நிலவும் அதிக வெப்பம் காரணமாக இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் எனவும், வெயிலில் நின்று வயல் வேலை செய்கின்றவர்கள் வெயிலின் உச்சமான நேரங்களில் வயல் வேலை செய்வதைத் தவிர்த்துக்கொள்வதன் மூலம் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் எனவும் வைத்திய சாலை வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டன.

### இதுவரையில்...

– இவ்வாறு கொழும்பு பேராயர் இல்லத்தின் பேச்சாளர் அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக அருட்தந்தை சிறில் காமினி நேற்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகியிருந்தார். இந்த நிலையில், கொழும்பு பேராயரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இன்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நேற்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் எனக்குச் சிறந்த முறையில் வரவவேற்பளிக்கப்பட்டது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் செயற்படும் பொறுப்பு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் இல்லை எனக் குறிப்பிடவில்லை.

மாறாக, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரை உரிய முறையில் சேவையாற்றுவதற்கு இடமளிக்கவில்லை எனத் தோன்றுகின்றது.

அதேநேரம், சவால்மிக்க கேள்விகள் எவையும் நேற்று அவர்கள் கேட்கவில்லை.

தற்போது வெளியாகாத பல விடயங்களை நேற்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் தெரிவித்தேன்.

அதேநேரம் முன்னதாக ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரதி ஒன்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டது.

அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்படுமாயின் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் பின்னணியில் உள்ள சகல தரப்பினர் தொடர்பான தகவல்களும் வெளியாகும்.” – என்றார்.



# மட்டக்களப்பு மாமங்கத்தில் அன்னை பூபதிக்கு அஞ்சலி

(எம்.ஏ.ஏ.அக்தார்)

மட்டக்களப்பு மாமங்கத்தில் தமிழ் இனத்துக்காக உண்ணா விரதம் இருந்து உயிர்நீத்த தியாகத் தாயின் 36ஆவது ஆண்டு நினைவை முன்னிட்டு அன்னை பூபதியின் அஞ்சலி நிகழ்வும் ஊர்திப் பவனியும் இடம்பெற்றன.

இதில் பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்து கொண்டு அஞ்சலியில் ஈடுபட்டனர்.



# வாகன இறக்குமதித் தடையை படிப்படியாக நீக்கத் தீர்மானம்



இலங்கையில் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு விதிக்கப்பட்டுள்ள தற்காலிக தடையை படிப்படியாக நீக்க அரசு தீர்மானித்துள்ளது.

இந்த நிலையில், பயன்படுத்தப்பட்ட வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்று இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இறுதியான வாகன இறக்குமதியின் போது பயன்படுத்தப்பட்ட வாகனங்களுக்கு வழங்கப்பட்ட 3 வருடங்களை 7 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட வருடங்களாக அதிகரிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பயன்படுத்தப்பட்ட வாகனங்களை இறக்குமதி செய்தால், புதிய வாகனங்களை விடக் குறைந்த விலையில் வழங்க முடியும் என்று இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

அரசின் வரி வருமானத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படாது என்று சங்கத்தின் தலைவர் இந்திக்க சம்பத் மெரெஞ்சிகே தெரிவித்துள்ளார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# தும்பை விட்டு வாலைப் பிடிப்பது!

'தும்பை விட்டு வாலைப் பிடிப்பது' என்பார்கள்.

ஈஸ்டர் ஞாயிறு தொடர்க் குண்டுத் தாக்குதல் விடயம் பற்றிய விசாரணையில் அப்படித்தான் நடந்து கொள்கின்றதோ இலங்கைப் புலனாய்வுத் துறை என்ற ஒரு சந்தேகம்தான் இப்போது எழுகின்றது.

இந்த விவகாரத்தில் இலங்கைப் புலனாய்வுத்துறை விசாரணைக்கு அழைக்கும் ஆள்களையும், அது செயற்படும் முறைமைகளையும் பார்க்கும் போது விசாரணை விடயம் தும்பை விட்டு வாலைப் பிடிக்கும் கதையாகிக் கொண்டிருப்பது தெளிவாகுகின்றது.

இந்த விடயத்தில் கொழும்புப் பேராயர் கர்த்தினால் மல்கம் ரஞ்சித்துக்கு மிகவும் நெருக்கமாக செயல்படுபவரும், கொழும்பு உயர் மறை மாவட்டத்தின் தொடர்பாடல் குழு உறுப்பினரும், சிங்கள கத்தோலிக்க வார இதழான 'ஞானரத்த பிரதீபய'வின் ஆசிரியருமான வண. பிதா சிறில் காமினி பெர்னாண்டோவை மீண்டும் ஒரு தடவை விசாரணைக்கு அழைத்திருக்கின்றது குற்றப் புலனாய்வுத்துறை.

அதன்படி அவர் திரும்பவும் குற்றப் புலனாய்வுத்துறைக்குச் சென்றிருக்கின்றார். இந்தக் குண்டுத் தாக்குதல் தொடர்பாக தாம் அறிந்தவற்றை, திரட்டிய தகவல்கள் போன்றவற்றையெல்லாம் மீண்டும் ஒரு தடவை குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு வரிசைப் படுத்திக் கூறியிருக்கின்றார்.

"ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் குறித்து குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்குப் பல தகவல்கள் நன்கு தெரியும். ஆனால் இதுவரை அவற்றின் அடிப்படையில் சரியான புலன்விசாரணைகள் முன்னெடுக்கப்படவே இல்லை. இப்போது திரும்பவும் நான் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் புலனாய்வு விசாரணைகள் நடக்குமா, மாற்றம் ஏதும் நிகழுமா என்பதை நாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டி இருக்கும்" - என்று அவர் கூறினார்.

இதுபோன்று பல தடவைகள் வண. பிதா சிறில் காமினி பெர்னாண்டோ குற்றப்புலனாய்வுப் பிரிவினர் முன் முன்னிலையாகி பல விடயங்களை, விவரங்களை முன்வைத்து விட்டார். ஆனால் அவர் பகிர்ந்து கொண்ட விவரங்களின் அடிப்படையில் நியாயமான எந்தப் புலன்விசாரணையும் இதுவரை முன்னெடுக்கப்படவே இல்லை என்று அவர் பெரும் விசனத்துடன் சுட்டிக் காட்டியிருக்கின்றார்.

இப்போதும், அரசியல் ஆட்சி பீடத்தில் மாற்றம் வந்தால் மட்டுமே ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் பின்னால் புதைந்து கிடைக்கும் பல உண்மைகள் அம்பலத்துக்கு வரும், அதற்கேற்ப நியாயமான விசாரணைகள் நடைபெறும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் குறித்து நீதி, நியாயமான, உண்மையான விசாரணைகளை நடத்துங்கள், சூத்திரதாரிகளை காப்பாற்றுவதற்காக ஒளிவு, மறைவு நடவடிக்கைகளை முனெடுக்காதீர்கள் என்று நீண்ட காலமாக வலியுறுத்தி வருபவர்கள் கிறிஸ்தவ மத பீடத்தினர். அந்த வரிசையில் முன்னணியில் இருப்பவர்களில் ஒருவர் வண. பிதா சிறில் காமினி பெர்னாண்டோ. தாம் வெளியிட்ட தகவல்கள், திரட்டிய விவரங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் உண்மையான விசாரணை ஒன்றை முன்னெடுங்கள் என்று அவர்கள் வலியுறுத்தினால், அந்த வலியுறுத்தலை முன்வைக்கும் தரப்புகளையே போட்டு நோண்டிக் கொண்டிருக்கின்றது புலனாய்வுத்துறை. அதனால்தான் தும்பை விட்டு வாலைப் பிடிக்கும் போக்கு இது என்று விமர்சிக்கிறோம்.

இந்தத் தொடர் குண்டுத் தாக்குதலில் பெரும் பாதிப்பு கிறிஸ்தவர்களுக்கும் மற்றும் அவர்களின் தேவாலயங்களுக்கும்தான்.

ஆகவே இவ்விடயத்தில் நீதி கோரும் - நியாயம் தேடும் - விசேட அழுத்தம் அத்தரப்பிடமிருந்துதான் வரும். வர வேண்டும்.

பாதிக்கப்பட்ட தரப்புகளை திருப்திபடுத்தக்கூடிய ஒரு நியாயமான புலன் விசாரணை இவ்விவகாரத்தில் இதுவரை இடம்பெறவே இல்லை என்பது துலாம்பரமானது.

அதற்குப் பதிலாக பாதிக்கப்பட்ட மக்களின் சார்பில் குரல் எழுப்புகின்ற - அதற்காகத் துணிந்து போராடுகின்ற - தரப்புகளைத் தொல்லைப்படுத்துவது, பகிரங்கமாக வைவது, விமர்சிப்பது, கண்டிப்பது போன்றவைதான் இங்கு நடக்கின்றன.

ஆட்சியாளரான ஜனாதிபதி ரணில் ரணில் விக்கிரமசிங்கவின் தரப்பின் பிரச்சாரங்களும் அப்படி அந்த திசையில்தான் - கிறிஸ்தவ மத பீடத்தை மோசமாக விமர்சிக்கும் திசையில்தான் - இருக்கின்றது.

# அரசின் முட்டாள்தனமான முடிவால் பாதிக்கப்படுகிறது சுற்றுலாத்துறை!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு



நாட்டில் வளர்ச்சி பெற்றுவந்த சுற்றுலாத்துறை அரசின் முட்டாள் தனமான செயற்பாட்டால் பாதிக்கப் பட்டுள்ளது. சுற்றுலாத் துறை படிப் படியாக முன்னேறி, அதிக அள வில் வெளிநாட்டினர் நம் நாட்டிற்கு வரத் தொடங்கியுள்ள வேளையில், இந்த அரசு திடீரென வெளிநாட்டினருக் கான விசா கட்டணத்தை அதிகரித்துள் ளது.

சார்க் நாடுகளில் உள்ள வெளி நாட்டினருக்கு 20 முதல் 35 டொலர் வரையிலும், சார்க் அல்லாத நாடுகளில் உள்ள வெளிநாட்டினருக்கு 50 முதல் 75 டொலர் வரையிலான சேவைக் கட்டணமும், மேலதிக கட்டணமும் அறவிட்டு வருகிறது.

சார்க் அல்லாத நாடுகளின் விசா கட்டணம் 100 டொலர்களைத் தாண்டியுள்ளது. சார்க் நாடுகளுக் கான வீசா கட்டணம் 58 டொலர்களை தாண்டியுள்ளது. இதன் காரணமாக முன்னேற்றம் கண்டு வந்த சுற்று லாத்துறை கூட ஸ்தம்பிதம் அடையும் நிலை ஏற்பட்டு வருகிறது.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 159 ஆவது கட்டமாக 10 லட்சம் ரூபா பெறுமதி யான ஸ்மார்ட் வகுப்பறை உபகர ணங்கள், கொழும்பு, மஹரகம, ஸ்ரீ சந் திரரத்ன மானவசிங்க மகா வித்தி யாலயத்துக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரை யாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ரஷ்யாவில் இருந்து ரெட் விங்ஸ் என்ற விமானம் மூலம் சுமார் 800 சுற்றுலாப் பயணிகள் நமது நாட்டுக்கு வருகைதரவிருந்தனர். இதன் காரண மாக அதுவும் தற்போது கைவிடப் பட்டுள்ளது.

இது போன்ற முட்டாள்தனமான முடிவுகளை எடுப்பதற்கு முன்னர், உகந்த ஆய்வு நடத்தப்பட்டதா என்ப தில் சிக்கல் நிலவுகிறது. தாய்லாந்து, கம்போடியா, வியட்நாம், மாலைதீவு மற்றும் மாலி போன்ற நாடுகளுக்கு விசா சலுகையும், விசா கட்டணமும் முற்றிலும் தள்ளுபடி செய்யப்பட் டுள்ள நேரத்தில், நமது நாட்டில் 100 டொலரைத் தாண்டிய தொகை அறவி டப்படுகிறது. இது ஒரு முட்டாள் தனமான முடிவு.

இந்தப் புதிய முறையால், தேவை யற்ற பிரச்சினைகள் உருவெடுத் துள்ளன.

எலக்ட்ரானிக் டிராவல் ஆட்டோ மேஷன் சிஸ்டத்தில் இருந்து விலகி, வி.எவ்.எஸ். உலகளாவிய இணைய தளம் மூலம் இந்த திட்டத்தை செயல் படுத்துவதால், விசா கொள்முதல் செயல்முறையை வினைத் திறனற்ற தாக ஆக்கியுள்ளது.

புதிய முறையில் விசா பெறும் வாய்ப்பை இல்லாமலாக்கி, தேவை யில்லாத பிரச்சினைகளை உரு வாக்கி விட்டுள்ளது. இந்த நிலை யில் 30 நாள் விசாவுக்கான வாய்ப்பை கூட இழந்துள்ளது. இதன் காரணமாக சில வெளிநாட்டவர்கள் நீண்ட காலம் தங்குவதற்கு வழங்கப்படும் விசாக்களை பயன்படுத்தி இந்த நாட்டில் சட்டவிரோத தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். வட்டி யில்லா இணையக் கடன் மாபியா நாட்டில் உருவெடுத்துள்ளதையும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு சுட்டிக் காட்டினார்.

தன்னிச்சையான மற்றும் முட்டாள் தனமான முடிவுகளால் சுற்றுலாத் துறையின் பங்குதாரர்கள் விரக்தி யடைந்துள்ளனர். இது குறித்து கலந் துரையாடி, ஆலோசிக்காமல் இவ்வாறு அதிகரிப்பதால் நாட்டின் சுற்றுலாத்துறை வீழ்ச்சியடையும்.- என்றார்.





## தென்கிழக்குப் பல்கலையில் நடந்த

# இலங்கை நூலகச் சங்கத்தின் 18ஆவது தேசிய ஆய்வு மாநாடு





**(எம்.எம்.றம்ஸீன்)**

இலங்கை நூலக சங்கத்தின் 18 ஆவது தேசிய ஆய்வு மாநாடு முதன் முதலாக கிழக்கு மாகாணத்தில் தென் கிழக்குப் பல்கலைக்கழக தொழில் நுட்பவியல் பீடத்தின் கேடபோர் கூடத்தில் இடம்பெற்றது.

தென் கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர் கலாநிதி திருமதி முஹம்மட் மஸ்றூபா தலைமையில் இடம்பெற்றது.

இந்த ஆய்வு மாநாட்டில் பிரதம அதிதியாக தென் கிழக்குப் பல்கலைக்கழக பதில் உப வேந்தரும், கலை, கலாசார பீடத்தின் பீடாதிபதியுமான பேராசிரியர் எம்.எம்.பாஸில் கலந்து கொண்டார்.

ஆய்வு மாநாட்டின் முதன்மை பேச்சாளராக பேராதனை பல்கலைக்கழக நூலகர் ஆர். மகேஸ்வரன் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார்.

கௌரவ அதிதியாக கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என். மணிவண்ணன், கிழக்குப் பல்கலைக்கழக நூலகர் கலாநிதி டபிள்யு. ஜே.ஜெயராஜ், தென் கிழக்குப் பல்கலைக்கழக தொழில் நுட்பவியல் பீட தலைவர் யு.எல்.அப்துல் மஜீத், இலங்கை நூலக சங்கத்தின் தலைவர் பிருத்தி லியனகே,யாழ்ப்பாண பல்கலைக்கழக பதில் நூலகர் கலாநிதி திருமதி கே.சந்திரசேகர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இங்கு பிரதம அதிதி மற்றும் கௌரவ அதிதிகளுக்கு நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. மாநாட்டு மலரும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த முறை நடைபெறும் தேசிய மாநாடு நூலகங்கள் மற்றும் சமூகத்தின் இணைப்பு, சமூகத்தின் மூலம் பிணைப்பை வலுப்படுத்தல் எனும் தொனிப்பொருளில் இடம்பெறுகிறது. விசேடமாக இலங்கையில் மும்மொழிகளிலும் இந்த ஆய்வு மாநாடு நடத்தப்படுவது விசேட அம்சமாகும்.



# சர்வ மத இளையோர் பங்களிப்புடன் தென் கிழக்கு பல்கலையில் நிகழ்வு

**(எம்.எம்.றம்ஸீன்)**

தென் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஒலுவில் இளைஞர்கள் இணைந்து வழங்கிய இன நல்லுறவுக்கு வழிகாட்டும் பல்கலாசார காட்சிப்படுத்தல் நிகழ்வு தென் கிழக்கு பல்கலைக்கழக வளாகத்தில் இடம்பெற்றது.

தென் கிழக்கு பல்கலைக்கழக உப வேந்தர் பேராசியர் கலாநிதி றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாக கலந்து கொண்ட மேற்படி நிகழ்வில் இந்து, இஸ்லாமிய, பௌத்த மற்றும் கிறிஸ்தவ மத கலாசார நிகழ்வுகள் நடைபெற்றன.





# பல்லின கலை இலக்கிய விழா திருமலை மாவட்ட செயலகத்தில்



**(ஹஸ்பர் ஏ.எச்.)**

திருகோணமலை மாவட்ட செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட மாவட்ட பல்லினகலைஇலக்கியவிழாதிருகோணமலைமாவட்டசெயலகவளாகத்தில்நேற்று முன்தினம் அரச அதிபர் சாமிந்த ஹெட்டியாராச்சி தலைமையில் நடைபெற்றது.

திருகோணமலை மாவட்ட அரச அதிபரால் தேசியக் கொடி ஏற்றப்பட்டு தேசிய கீதம் இசைக்கப்பட்டு நிகழ்வு ஆரம்பமானது.

சிங்கள, தமிழ், இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவ சமயங்களின் கலை கலாசார நிகழ்வுகளும் இதன்போது மாவட்ட செயலக உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதலுடன் நடைபெற்றது.

கயிறு இழுத்தல், முட்டி உடைத்தல், தலையணை அடி, கரண்டியில் தேசிக்காய் வைத்து நடத்தல், யானைக்கு கண் வைத்தல், தொப்பிகளை மாற்றுதல், பலூன் நடனம், பப்பாளி விதைகளை எண்ணுதல் உள்ளிட்ட பல போட்டிகள் நடத்தப்பட்டன. வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்களும் இதன்போது வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மேலதிக அரச அதிபர்கள், மாவட்ட செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.





# கற்பிட்டியில் விளையாட்டுப் போட்டி

**(கற்பிட்டி சியாஜ்)**

பிறந்திருக்கும் தமிழ் – சிங்கள புத்தாண்டை சிறப்பிக்கும் முகமாக கற்பிட்டி ஸ்ட்ரபோட் சர்வதேச பாடசாலையின் ஏற்பாட்டில் ஸ்ட்ரபோட் பன் கலா – 2024 மாபெரும் விளையாட்டு நிகழ்வுகள் இன்றும் நாளையும் கற்பிட்டி நீதிமன்றத்துக்கு முன்பாக உள்ள திறந்த வெளியில் இடம்பெறவுள்ளன.

இந்த விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளில் சைக்கிள் மற்றும் மரதன் ஓட்டப் போட்டிகளுடன் இன்னும் பல்வேறு வகையான விளைட்டுப் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெறுபவர்களுக்கு பெறுமதி வாய்ந்த பணப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.



# கிழக்கு பல்கலை அழகியற் கற்கை நிறுவகத்தில் ஓவியக் கண்காட்சி!



(பழுவூரான்)

கிழக்கு பல்கலைக் கழக சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தில் கற்புல தொழில்நுட்ப கலைப்பிரிவு துறையில் கற்கை நெறியை நிறைவு செய்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மாணவி பிரமானுஜா சிவகுமாரன் தற்போது சுவாமி விபுலானந்தா அழகியலற் கற்கைகள் நிறுவகத்தில் கற்புல தொழில்நுட்ப கலைப்பிரிவு துறையின் தற்காலிக போதனாசிரியராக பணியாற்றுவதோடு, தூரிகையின் ஓவிய கண்காட்சி ஒன்றை சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகத்தில் காட்சி படுத்தியுள்ளார்.

பிரமானுஜா சிவகுமாரனின் தூரிகை தூரல்கள் ஓவிய கண்காட்சி மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமானது.

இந்த நிகழ்வில் ஆன்மீக அதிதியாக சிலோன் அமெரிக்கமிஷன் அருட் பணி சொலமன்ஸூம், அதிதிகளாக கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகப் பணிப்பாளர் பேராசிரியர் பாரதி கென்னடி , கிழக்குப் பல்கலைக் கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவக அஸ்மர் ஆதம் விரிவுரையாளர் எஸ். சீவரெத்தினம் , சிரேஷ்ட விரிவுரையாளர் ரமேஷ் பிரகாஷ் மற்றும் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர் .

இந்த ஓவிக் கண்காட்சியில் பிரமானுஜா சிவகுமாரனால் வரையப்பட்ட சூழல் நேய ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

# இன நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பும் விளையாட்டு நிகழ்வுகள் மஸ்கெலியாவில்

(மஸ்கெலியா)

இன நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பும் வகையில் முதன் முறையாக மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் உள்ள தமிழ் பாடசாலை ஒன்றில் சித்திரை புத்தாண்டு விளையாட்டு போட்டிகள் இடம்பெற்றுள்ளன.

இந்த நிகழ்வு மஸ்கெலியா சாமிமலை பெயாலோன் கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர்களிடையே இடம்பெற்றது.

இந்தச் சித்திரை புத்தாண்டு விளையாட்டு போட்டிகள் கல்லூரி விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

நோட்டன் விவசாய சேவைகள் நிலையத்தின் விவசாய சேவைகள் திணைக்களத்தின் பணிப்புரையின் பேரில் சாமிமலை விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் சரத் குமாரவால் சித்திரை புத்தாண்டு விளையாட்டு போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

தமிழ் – சிங்கள தேசிய விளையாட்டு மற்றும் கலாசார அம்சங்களுக்கு முன்னுரிமை அளித்து பிரதேசத்திலுள்ள தமிழ் பாடசாலையில் முதன் முறையாக நடைபெற்ற சித்திரை புத்தாண்டு விளையாட்டு போட்டிகள் தமிழ் மாணவர்கள் பல புதிய அனுபவங்களைப் பெற முடிந்ததாக பெயலோன் கல்லூரி அதிபர் சுப்பையா தெரிவித்தார்.

தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை வளர்ப்பதற்கு பெரும் உதவியாக இருந்தது என்றும் அவர் தெரிவித்தார்.

சாமிமலை நகரில் உள்ள வர்த்தக சமூகம், தோட்ட முகாமையாளர்கள் மற்றும் அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகள் இந்த சித்திரை புத்தாண்டு விளையாட்டு போட்டிக்கு அனுசரணை வழங்கியிருந்தனர்.

இந்த நிகழ்வில் நுவரெலியா மாவட்ட விவசாய சேவைகள் பிரதி ஆணையாளர் வசந்த குணவர்தன, ஹொரண பெருந்தோட்டயாக்கத்தின் முகாமையாளர்கள், தோட்ட அதிகாரிகள், நோட்டன் விவசாய சேவை நிலையத்தின் விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி உதவியாளர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், தோட்ட தொழிலாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர் .




# கிரிக்கெட் உபகரணங்கள் வழங்கல்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கை கிரிக்கட் அணியின் முன்னாள் கிரிக்கட் ஜாம்பவான் சமிந்த வாஸ் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரிக்கு கடின பந்து கிரிக்கெட் உபகரணங்களை வழங்கி வைத்தார்.

வன்னி மாவட்ட புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் கடினபந்து கிரிக்கெட் துறையை மேலும் வலுவூட்டும் வகையில் கடினப்பந்து அணிக்ககான பயிற்சி உபகரணங்களை இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் ஜாம்பவான் சமிந்த வாஸ் அண்மையில் வழங்கி வைத்தார்.



# சம்மாந்துறையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிப் பொதிகள்

(சர்ஜுன் லாபீர்)

அண்மையில் வெள்ளத்தால் நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிக்கப்பட்ட வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மக்களுக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையில் உதவிப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் வெள்ளத்தால் பாதிப்புற்று தெரிவு செய்யப்பட்ட சுமார் 300 குடும்பங்களுக்கு இந்த உதவிப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு நேற்று (19) அனர்த்த நிவாரண சேவைகள் உத்தியோகத்தர் எம்.எஸ்.எம் அஸாருத்தீன் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக சம்மாந்துறை பிரதேச செயலாளர் தேசபந்து எஸ்.எல்.முஹம்மது ஹனீபா கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வுக்கு செஞ்சிலுவைச் சங்கத்தின் அம்பாறை மாவட்ட செயலாளர் பிரத்தீப் தென்னக்கோன், முன்னாள் கிழக்கு மாகாண பிரதிப் பிரதம (நிதி) செயலாளரும், செஞ்சிலுவைச் சங்கத்தின் அம்பாறை மாவட்ட உயர் பீட உறுப்பினருமான ஐ.எம்.ஹுசைன், சம்மாந்துறை பொதுச் சுகாதார பரிசோதகர்கள், கிராம சேவகர்கள் மற்றும் செஞ்சிலுவை அமைப்பின் அதிகாரிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.






# மட்டு. சிவானந்தா தேசிய கல்லூரியில்
# மாபெரும் T-20 கிரிகெட் சமர்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மட்டக்களப்பு மாவட்ட கிரிக்கெட் அபிவிருத்தி சபையின் ஏற்பாட்டில் இடம் பெறவுள்ள 'பற்றி பிக்பாஸ் T-20' கடினப் பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை மாலை கல்லடி கிறீன் கார்டன் ஹோட்டலில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட கிரிக்கெட் அபிவிருத்தி சபையின் தலைவர் எப்.எஸ். லோகாஸ் தலைமையில் இந்த ஊடக வியலாளர் சந்திப்பு நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கிரிக்கெட்டின் தரத்தினை மேலும் அபிவிருத்தி செய்யும் நோக்கில் மட்டக்களப்பு சிங்கிங் பிஸ், காத்தான்குடி லயன்ஸ், பாசிக்குடா சார்க்ஸ், கொக்கட்டிச்சோலை பிளெக்கெட்ஸ், ஏறாவூர் ஈகிள்ஸ் ஆகிய 5 அணிகள் பங்குபற்றும் T-20 கடினப் பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று (20) தொடக்கம் வரும் 28ஆம் திகதி வரை மட்டக்களப்பு கல்லடி சிவானந்தா தேசிய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்லாறு தொடக்கம் ஓட்டமாவடி வரையில் இச் சுற்றுப் போட்டிக்கு விண்ணப்பித்த 147 வீரர்களிலிருந்து 80 வீரர்கள் ஏலத்தில் எடுக்கப்பட்டு ஐந்து அணிகளிலும் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

இப்போட்டிகளை ஊடகவியலாளரும் வர்ணனையாளருமான தில்லையம்பலம் தரணிதரன் வர்ணனை செய்கின்றார்.

மட்டக்களப்பு மாவட்ட வீரர்களை உலக அளவில் அறிமுகம் செய்யும் வகையில் இப்போட்டிகள் அனைத்தும் நேரலை செய்யப்படுகின்றது.

மாவட்டத்தின் கிரிக்கெட் வரலாற்றில் முதல் தடவையாக இப்போட்டியில் முதலிடத்தைப் பெறும் அணிக்கு பத்து இலட்சம் ரூபா பணப்பரிசில் வழங்கப்பட வுள்ளது.

இச்சுற்றுப் போட்டியின் மூலம் கடினக் பந்துக் கிரிக்கெட் விளையாட்டு மாவட்டத்தில் உள்ள கிரிக்கெட் விளையாட்டு வீரர்களுக்கு ஓர் எழுச்சியை ஏற்படுத்துமெனவும் கிரிக்கெட் ரசிகர்கள் இப்போட்டிகள் அனைத்தையும் மைதானத்திற்கு வருகை தந்து இலவசமாகப் பார்த்து ரசிக்க முடியுமெனவும் இதன் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.





# திருகோணமலை, கிண்ணியா பிரதேச மக்களுக்கு காணி உறுதிப் பத்திரங்கள்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா பிரதேச மக்கள் கடந்த 40 வருடங்களுக்கும் மேலாக கோரிக்கை விடுத்துவரும் காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் பிரதேச செயலாளர் எம்.எச்.எம்.கனி தலைமையில் கிண்ணியா பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அதாவுல்லா, கிழக்கு மாகாண காணியமைச்சின் செயலாளர் எஸ். கோபாலரத்னம் ஆகியோர் கலந்து கொண்டனர்.







# ஆயிரம் கிலோ எடை கொண்ட வாசுகி பாம்பின் படிமங்களே குஜராத்தில் கண்டுபிடிக்கப்பட்டன

## விஞ்ஞானிகள் ஆய்வின் பின் தகவல்

குஜராத்தில் கண்டுபிடிக்கப்பட்ட புதைபடிவமானது, பூமியில் இதுவரைக் கண்டறியாத மிகப் பெரிய பாம்பினுடையதாக இருக்கலாம் என்றும் இது டைட்டனோபோவாவை விடவும் பெரியது என்றும் விஞ்ஞானிகள் ஆய்வின் மூலம் தெரிவித்துள்ளனர்.

குஜராத் மாநிலம் கட்சி பகுதியில் உள்ள நிலக்கரி சுரங்கத்தின் அருகே, கடந்த 2005 ஆம் ஆண்டில் தொல்லியல் துறை ஆய்வாளர்கள் ஆய்வு மேற்கொண்டனர்.

அப்போது, பூமிக்கு அடியில் மிக நீளமான உருவ அமைப்புடன் கூடிய படிமப் பொருள் ஒன்றை ஆய்வாளர்கள் கண்டுபிடித்தனர்.

அப்போது, அது ஒரு முதலை இனமாக இருக்கலாம் என முதலில் கருதப்பட்டது. பிறகு, அந்த படிமப் பொருளை உத்தரகாண்டில் உள்ள ஐஐடி ரூர்க்கியை சேர்ந்த விஞ்ஞானிகள் ஆராய்ச்சியை மேற்கொண்டனர்.

இந்த ஆய்வின் முடிவில், படிமப் பொருளாக கருதப்பட்டது பூமியில் இதுவரை இல்லாத மிகப் பெரிய பாம்புகளில் ஒன்று எனத் தெரியவந்துள்ளது.

இந்த பாம்பிற்கு "வாசுகி இண்டிகஸ்" என ஆராய்ச்சியாளர்களால் பெயரிடப்பட்டது.

அறிவியல் அறிக்கைகளில் வெளியிடப்பட்ட இனங்கள் பற்றிய ஆய்வில், 'இந்த பாம்பு 47 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு கட்ச்சின் சதுப்பு நிலத்தில் வாழ்ந்ததாகவும், பாம்பு 36 முதல் 50 அடி வரை நீளமாக இருந்த தாகவும்' கூறப்படுகிறது.

மேலும், அளவில், வாசுகி இண்டிகஸ் தற்போது அழிந்து வரும் டைட்டனோபோவாவை விட பெரியதாக இருக்கலாம் என்றும் இது 42 அடி அளவுள்ள மிகப்பெரிய பாம்பு என்றும் ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது ஒரு டன் அல்லது 1,000 கிலோ கிராம் வரை எடையுள்ளதாக இருக்கலாம் எனவும் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். இன்று வாழும் மிகப் பெரிய பாம்பு ஆசியாவின் 33 அடி நீளமுள்ள ரெட்டிகுலேட்ட் மலைப்பாம்பு ஆகும்.

# மேலும் 5 டிகிரி வரை வெப்பநிலை தமிழகத்தில் அதிகரிக்க வாய்ப்பு!

## வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை

சென்னை,ஏப்.20

தமிழகத்தில் கோடை வெயில் வாட்டி எடுத்து வருகிறது. பகல் நேரங்களில் வெளியில் தலை காட்ட முடியாத அளவுக்கு வெயிலின் தாக்கம் அதிகமாகவே உள்ளது.

மோட்டார் சைக்கிளில் செல்பவர்கள் வியர்வை மழையில் நனைந்தபடியே கொளுத்தும் வெயிலில் பயணம் செய்ய வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இப்படி பகலில் அதிகரித்து காணப்படும் வெயிலால் இரவு நேரத்திலும் புழுக்கம் அதிகரித்து அனல் காற்றே வீசுகிறது.

இந்நிலையில் சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் –

வட தமிழக உள் மாவட்டங்களின் ஒரு சில இடங்களில், அடுத்த 24 மணி நேரத்திற்கு அதிகபட்ச வெப்பநிலை 3-5 செல்சியஸ் வரை இயல்பை விட அதிகரிக்க வாய்ப்புள்ளது.

ஏப்ரல் 21 ஆம் திகதி முதல் ஏப்ரக்24 ஆம் திகதி வரை அதிகபட்ச வெப்பநிலை சற்றே குறைந்து ஒருசில இடங்களில் இயல்பை விட 2-3 டிகிரி செல்சியஸ் அதிகமாக இருக்கக்கூடும்.

ஏப்ரல் 24 ஆம் திகதி வரை காற்றின் ஈரப்பதம் தமிழக உள் மாவட்டங்களின் சமவெளி பகுதிகளில் பிற்பகலில் 30-50 வீதமாக இருக்கக்கூடும்.

மற்ற நேரங்களில் 40-75 வீதமாகவும், கடலோரப் பகுதிகளில் 50-80 வீதமாகவும் இருக்கக்கூடும். அதிக வெப்பநிலை, அதிக ஈரப்பதம் இருக்கும்பொழுது ஓரிரு இடங்களில் அசௌகரியம் ஏற்படலாம்.



தமிழகப் பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக ஏப்ரல் 23 வரை மழைக்கு வாய்ப்பு உள்ளது.

மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், அதனை ஒட்டிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 37-38 டிகிரி செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 27-28 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# புதிதாக இரு ஏவுகணைகளை ஏவி வடகொரிய இராணுவம் சோதனை

பியாங்யாங்,ஏப்.20

அமெரிக்காவின் தொடர் எச்சரிக்கைகளையும் மீறி, தென்கொரியாவுக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையில் வட கொரியா பல்வேறு ஏவுகணை பரிசோதனைகளை நிகழ்த்தி வருகிறது. இதனால் கொரிய தீபகற்பத்தில் பதற்றமான சூழல் நிலவி வருகிறது.

இந்த நிலையில் வடகொரிய இராணுவம் புதிதாக இரு ஏவுகணைப் பரிசோதனைகளை நிகழ்த்தியுள்ளது. இதன்படி வடகொரியாவில் உள்ள மேற்கு கடல் பகுதியில், 'ஹவாசால்-1 ரா-3' என்ற சக்திவாய்ந்த ஏவுகணையையும், விமானத்தை தாக்கி அழிக்கும் 'பியோல் ஜி-1-2' என்ற ஏவுகணையையும் நேற்றைய தினம் வடகொரியா பரிசோதனை செய்துள்ளது.

வேகமாக வளர்ந்து வரும் அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்ப போர்க்கருவிகளில் தொழில்நுட்பங்களை புகுத்தும் நடைமுறையின் ஒரு பகுதியாக இந்த இரு சோதனைகளும் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன என வடகொரிய அரசின் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

# கழிவறை சுத்தம் செய்யும் திரவம் மனைவியின் உணவில் கலப்பு!

## இம்ரான் கான் பரபரப்புக் குற்றச்சாட்டு

இஸ்லாமாபாத்,ஏப்.20

தனது மனைவி புஸ்ரா பீவிக்கு உணவில் கழிவறை சுத்தம் செய்யும் திரவம் கலந்து கொடுக்கப்பட்டுள்ளதாக இம்ரான் கான் குற்றம்சாட்டியுள்ளார்.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான், பல்வேறு ஊழல் வழக்குகளில் கைது செய்யப்பட்டு அடியாலா சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இதனிடையே இஸ்லாமிய நடைமுறைக்கு எதிரான திருமணம் செய்தமை தொடர்பான வழக்கில் இம்ரான் கான் மற்றும் அவரது மனைவி புஸ்ரா பீவிக்கு தலா 7 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து பாகிஸ்தான் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

இதையடுத்து புஸ்ரா பீவி, இஸ்லாமாபாத்தில் உள்ள பாணி காலா இல்லத்தில் சிறைவைக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில் தனது மனைவி புஸ்ரா பீவிக்கு, உணவில் கழிவறை சுத்தம் செய்யும் திரவம் கலந்து கொடுக்கப்பட்டுள்ளதாக இம்ரான் கான் பரபரப்புக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.





தனது மனைவிக்கு கொடுக்கப்படும் விஷம் கலந்த உணவால் அவர் தீவிர வயிற்று வலியால் அவதிப்பட்டு வருவதாகவும், இதனால் அவரது உடல்நிலை நலிவடைந்து வருவதாகவும் இம்ரான் கான் குற்றம்சாட்டியுள்ளார். ஊழல் வழக்கு தொடர்பான விசாரணைக்கு ஆஜரானபோது இந்தக் குற்றச்சாட்டுகளை இம்ரான் கான் தெரிவித்துள்ளார்.

மேலும் இஸ்லாமாபாத்தில் உள்ள சர்வதேச மருத்துவமனையில் தனது மனைவியின் உடல்நிலையை பரிசோதித்து சிகிச்சை அளிக்க வேண்டும் எனவும் இம்ரான் கான் கோரிக்கை விடுத்துள்ளார். இதையடுத்து அடுத்த 2 நாள்களில் இம்ரான் கான் மற்றும் அவரது மனைவிக்கு தனியார் ஆஸ்பத்திரியில் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டது.

கனடா முரசு
பக்கங்கள் 06
சனிக்கிழமை 20/04/2024

## மாற்றுத்திறனாளிகளுக்கான ஒதுக்கீடு குறித்து அதிருப்தி

ஒன்ராரியோ, ஏப்ரல் 20
கனடாவின் முன்னணி மாற்றுத் திறன் கல்வியியலாளர்களில் ஒருவர் மத்திய அரசாங்கத்தின் ஆலோசனைக் குழுவில் இருந்து விலகுகிறார் எனத் C2



# மத்திய கிழக்கில் பதற்றத்தைத் தணிப்பதற்கு கனடிய வெளிவிவகார அமைச்சர் கோரிக்கை

**ஒன்ராரியோ, ஏப்ரல் 20**
**மத்திய கிழக்கில் அதிகரித்து வரும் பதற்றங்களைத் தணிப்பதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கனடிய வெளிவிவகார அமைச்சர் மெலானி ஜொலி தெரிவித்துள்ளார். ஏப்ரல் 18ஆம் திகதி இரவு ஈரானின் மீது இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதல் களையடுத்தே கனடாவின் இந்த அழைப்பு வெளியாகியுள்ளது.**

ஜி7 நாடுகளுடன் இணைந்து, மத்திய கிழக்கில் அதிகரித்துவரும் பதற்றங்களை தடுப்பதற்கு அனைத்துத் தரப்பினரையும் வலியுறுத்துவதாக அமைச்சர் ஜொலி குறிப்பிட்டுள்ளார். இந்த விடயம் குறித்து ஜி7 நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களும், ஐரோப் பிய ஒன்றிய பிரதிநிதிகளும் இணைந்து பொது அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

# கெரன் வெக்கியோ தமது பதவியில் நீடிக்கப்படாமை குறித்துக் கவலை

ஒன்ராரியோ, ஏப்ரல் 20
பெண்கள் விவகாரங்கள் தொடர்பான நாடாளுமன்ற குழுவின் தலைவராக இருந்த கன்சர்வேட்டிவ் நாடாளுமன்ற உறுப்பினர் கெரன் வெக்கியோவின் பதவி நீடிக்கப்படாமை தொடர்பில் ஆளும் லிபரல் மற்றும் புதிய ஜனநாயக கட்சி உறுப்பினர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

2017ஆம் ஆண்டில் இந்த குழுவின் தலைவராக வெக்கியோ தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

கட்சி பேதங்களைக் கடந்து அவரது பங்களிப்பு தொடர்பில் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் சிறந்த அபிப்பிராயத்தைக் கொண்டிருந்தனர்.

இந்த நிலையிலேயே அவரது பதவிக்காலம் ஏப்ரல் 18ஆம் திகதி நிறைவுக்கு வந்த நிலையில், அவருக்குப் பதிலாக கன்சர்வேட்டிவ் நாடாளுமன்ற உறுப்பினர் ஷெல்பி கிரேம்ப்-நியூமனை தெரிவு செய்திருந்தனர்.

இதனால், இந்த பதவித் தெரிவுக்கான வாக்கெடுப்பில் லிபரல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ள வில்லை.








# ஒட்டாவாவில் ஆறு இலங்கையர்களைக் கொன்ற சந்தேகநபர் பிணைக்கு விண்ணப்பிக்கவில்லை!

ஒன்ராரியோ, ஏப்ரல் 20

ஒட்டாவாவில் ஆறு இலங்கையர்களை கொலை செய்த குற்றச்சாட்டின் சந்தேகநபர் நேற்று முந்தினம் ஏப்ரல் 18ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாக்கப்பட்டுள்ளார்.

மார்ச் மாதம் 6ஆம் திகதி கனடாவின் தலைநகரான ஒட்டாவாவின் பார்ஹெவன் பகுதியில் உள்ள வீடொன்றில் தாய், நான்கு குழந்தைகள் மற்றும் குடும்ப நண்பர் உள்ளடங்கலாக இலங்கையைச் சேர்ந்த ஆறு பேர் கொலை செய்யப்பட்டமையுடன், ஒருவர் கடும் காயமுற்றிருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அதே வீட்டில் வசித்த 19 வயதான பெப்ரியோ டி சொய்சா சந்தேகநபராக கைது செய்யப்பட்டு விசாரணை இடம்பெற்று வருகின்றது.

சந்தேகநபர் மீது ஆறு முதல்தர கொலை மற்றும் ஒரு கொலை முயற்சி குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

ஏப்ரல் 25ஆம் திகதி சந்தேகநபர் மீண்டும் நீதிமன்றில் முன்னிலையாக்கப்பட்டுள்ளார்.

இந்த கொலைகளுக்கான காரணம் தொடர்பில் பொலிஸார் இதுவரை எந்தத் தகவல்களையும் வெளியிடாமை குறிப்பிடத்தக்கது.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட இலங்கை சேர்ந்த பெப்ரியோ டி சொய்சா பிணை கோரப் போவதில்லை என்று அவரது வழக்கறிஞர் தெரிவித்துள்ளார்.

இரவு நடந்த இந்தப் பயங்கரக் கொலைச் சம்பவத்தில் இலங்கையர் தர்ஷினி டிலந்திகா ஏகநாயக(35) மற்றும் இவரது நான்கு பிள்ளைகளான இனுக விக்ரமசிங்க (7), அஷ்வினி விக்கிரமசிங்க (4), ரினியானா விக்ரமசிங்க (2), கெல்லி விக்கிரமசிங்க (2 மாதம்) ஆகியோர் கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் இலங்கையில் இருந்து 2 மாதங்களுக்கு முன்பு வந்து, தனுஷ்க விக்கிரமசிங்க குடும்பத்துடன் தங்கியிருந்த மற்றொரு இலங்கையர் அமரகூன் முதியான்சலாகே ஜீ காமினி அமரகோன்(40) என்பவரும் கொல்லப்பட்டார்.

இந்த தாக்குதல் சம்பவத்தில் தர்ஷினியின் கணவரான தனுஷ்க விக்கிரமசிங்க அதிர்ஷ்டவசமாகத் தப்பிப் பலத்த காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்த சம்பவத்திற்கு முன்னதாக இணையதளத்தில் ஃபெப்ரியோ டி சொய்சா மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து புதிதாக வெளிப்படுத்தப்பட்ட மின்னஞ்சல்கள், இந்த வழக்கை மேலும் சிக்கலாக்குகின்றன என்று கூறப்படுகின்றது.

ஒரு முக்கிய தடயத்தை தாங்கள் கண்டுபிடித்துள்ளனர் என விசாரணை அதிகாரிகள் நம்புகின்றனர். பெப்ரியோ டி சொய்சாவின் மின்னணுக் கருவிகளில் இருந்து மீட்டெடுக்கப்பட்ட மின்னஞ்சல் தொடர்பு, இந்த மின்னஞ்சல்கள், தாக்குதலுக்கு முந்தைய வாரங்களில் ஒட்டாவா பகுதியில் உள்ள கல்லூரி வளாகங்கள் தொடர்பான தேடல்களைக் காட்டுகின்றன.

இந்த தேடல்களின் உள்ளடக்கம் தற்போது சட்ட அமலாக்க அதிகாரிகளால் பகுப்பாய்வு செய்யப்பட்டு வருகிறது, ஆனால் இவை இலக்குகள் குறித்த தகவல்களை சேகரிப்பதற்கான முயற்சிகளாக இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. கொலைகளுக்கான உந்துதல் குறித்து அதிகாரிகள் எந்த தகவலையும் வெளியிடவில்லை. இருப்பினும், இந்த மின்னஞ்சல்கள் வெளியிடப்படுவது, டி சொய்சாவின் செயல்களில் முன் கூட்டிய திட்டமிடல் இருந்ததற்கான சாத்தியத்தைச் சுட்டிக்காட்டுகிறது.

இந்த வழக்கு சட்ட அமைப்பு முறையின் மூலம் தொடரும் வரை கவனம் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## மாற்றுத்திறனாளிக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

மாற்றுத்திறன் சார்ந்த நிதியிடலில் பற்றாக்குறையே அவரது விலகலுக்கான காரணமாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விக்டோரியாப் பல்கலைக்கழகத்தின் சமூகக் கொள்கை தொடர்பான பேராசிரியரான மைக்கல் பிரின்ஸ் என்பவர், கனடாவின் மாற்றுத்திறன் நலன் நிதி குறித்து ஏமாற்றமடைந்தமையால் ஆலோசனைக் குழுவில் இருந்து தாம் விலகுகிறார் எனக் கூறியுள்ளார்.

இந்த ஆலோசனைக் குழு அமைச்சர் கமல் கேரோவின் தலைமையில் இயங்கி வருகின்றது.

புதிய வரவு - செலவுத் திட்டத்தில் அடுத்த ஐந்து வருடங்களுக்கு 6.1 பில்லியன் டொலர்களை ஒதுக்கியுள்ள அரசாங்கம், வருடாந்தம் நபரொருவருக்கும் 2,400 டொலர்கள் பலன் கிடைக்கும் எனத் தெரிவித்துள்ளது.

அதாவது, மாதம் ஒன்றிற்கு 200 டொலர்கள் அல்லது நாளொன்றுக்கு 6 டொலர்களாக இந்த உதவி கணிக்கப்பட்டுள்ளது.

வறுமையின் கீழ் வசிக்கும் 1.2 மில்லியன் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவுவதற்கு இந்த வரவு - செலவுத் திட்ட ஒதுக்கீடு போதியதல்ல என துறைசார் நிபுணர்கள் விமர்சனம் வெளியிட்டுள்ளனர்.



# பச்சைவீட்டு வாயு வெளியேற்றத்தை கட்டுப்படுத்தும் அல்பேர்ட்டாவின் திட்டத்தினால் சிறிதளவே பலன்!

அல்பேர்ட்டா, ஏப்ரல் 20

அல்பேர்ட்டா மாகாண அரசாங்கத்தின் பச்சைவீட்டு வாயு வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்தும் திட்டத்தில் சிறிதளவு பலனே கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வருடத்தில் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் வகையில் இந்தத் திட்டத்தை அல்பேர்ட்டா அரசாங்கம் அறிமுகப்படுத்தியிருந்தது.

எவ்வாறாயினும், குறைந்தளவு தேர்ச்சியின் காரணமாக, அல்பேர்ட்டாவில் சிறந்த காலநிலை மாற்றத்தினை எதிர்கொள்ளும் திட்டம் இல்லை என்பது தெளிவாகுவதாக துறைசார் நிபுணர்கள் விமர்சனம் வெளியிட்டுள்ளனர்.

2023ஆம் ஆண்டு ஏப்ரல் 19ஆம் திகதி அல்பேர்ட்டா அரசாங்கம் இந்தத் திட்டத்தை அறிமுகம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# கியூபெக் லிபரல் கட்சியின் தலைவர் தெரிவு ஜனவரியில் ஆரம்பித்து ஜூனில் முடிவு வரும்

கியூபெக்,ஏப்ரல் 20

கியூபெக் லிபரல் கட்சிக்கான புதிய தலைவர் தெரிவு அடுத்த வருடம் ஜனவரியில் ஆரம்பிக்கும். ஜூன் மாதத்தில் புதிய தலைவர் தெரிவு செய்யப்படுவார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

2022ஆம் ஆண்டு மாகாணத் தேர்தல்களின் பின்னர் முன்னாள் தலைவர் டொமினிக் அங்கிலாட் தமது தலைமைப் பொறுப்பில் இருந்து விலகியிருந்தார்.

இந்த மாகாணத் தேர்தலின் போது தொடர்ந்து பிரதான எதிர்கட்சியாக லிபரல் கட்சியினர் தம்மை நிலைநிறுத்திக் கொண்ட போதிலும், முந்தைய மாகாணத் தேர்தலிலும் பார்க்க 10 ஆசனங்களை இழந்திருந்தனர்.

அன்று முதல் மார்க் டெங்குவே கியூபெக் லிபரல் கட்சியின் தலைவராக இருந்து வருகின்றார்.




# சூறையாடப்பட்ட 6,600 தங்கக் கட்டிகளை கண்டறிய முடியாது பொலிஸார் தடுமாற்றம்

கனடா விமான நிலையமொன்றிலிருந்து 6,600 தங்கக் கட்டிகள் மோசடியாக அபகரிக்கப்பட்ட விவகாரம் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், அந்தச் சம்பவம் தொடர்பில் எழுந்துள்ள கேள்விகள் சிலவற்றிற்கு இன்னமும் பதில் கிடைத்தபாடில்லை.

2023ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 17ஆம் திகதி, சுவிட்சர்லாந்தின் சூரிச்சிலுள்ள வங்கி ஒன்றிலிருந்து கனடாவின் ரொரன்றோவுக்கு இரண்டு பார்சல்கள் அனுப்பப்பட்டுள்ளன. கனடாவின் ரொரன்றோ விமான நிலையத்திலுள்ள சரக்குகள் சேமிப்பகத்தில் அந்த பார்சல்கள் வைக்கப்பட்டிருந்திருக்கின்றன.

சிறிது நேரத்தில், தக்க ஆவணங்களுடன் வந்த ஒருவர் அந்த பார்சல்களை தனது ட்ரக்கில் ஏற்றிக்கொண்டு சென்றுள்ளார்.

அன்று இரவு 9.30 மணியளவில், அந்த பார்சல்களைப் பெற்றுக்கொள்ள சிலர் வந்துள்ளார்கள். அவர்கள் அந்தப் பார்சல்களுக்கான ஆவணங்களைக் கொடுக்க, அப்புறம்தான் தெரியவந்துள்ளது, ஏற்கனவே வந்த நபர்கள் மோசடியாளர்கள் என்பது.

அந்த பார்சல்களில், 6,600 தங்கக் கட்டிகள் இருந்துள்ளன. 400 கிலோ எடையுள்ள அவற்றின் மதிப்பு சுமார் 20 மில்லியன் டொலர்கள். அத்துடன், மற்றொரு பார்சலில் 2 மில்லியன் டொலர்கள் கரன்சியும் இருந்துள்ளது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என பொலிஸாருக்கு 9 பேர் மீது சந்தேகம் ஏற்பட்டுள்ள நிலையில், விமான நிறுவன ஊழியர் உட்பட ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். மூன்று பேர் தலைமறைவாகிவிட்டார்கள்.

திருடப்பட்ட, 400 கிலோ எடையுள்ள அந்த 6,600 தங்கக் கட்டிகளின் மதிப்பு சுமார் 20 மில்லியன் டொலர்கள். பிரச்சினை என்னவென்றால், திருடப்பட்ட அந்த தங்கத்தில் செய்யப்பட்ட, 89,000 டொலர்கள் மதிப்புடைய ஆறு வளையல்கள் மட்டுமே இதுவரை மீட்கப்பட்டுள்ளன.

மீதமுள்ள தங்கம் போன இடம் தெரியவில்லை. 6,600 தங்கக் கட்டிகளை விற்பது எளிதல்ல என்பதால், அந்தத் தங்கக் கட்டிகள் உருக்கப்பட்டு விற்கப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் கருதுகிறார்கள்.

திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களிடமிருந்து சுமார் 65 துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ள நிலையில், விலையுயர்ந்த அந்தத் துப்பாக்கிகள், தங்கம் விற்ற பணத்தில் வாங்கப்பட்டிருக்கலாம் என பொலிஸார் கருதுகிறார்கள். விசாரணை தொடர்கிறது.






# 4 வருடங்களுக்கு முன் காணாமல் போனவரை சசகெட்டூனில் மண்மேட்டில் தேடுவதற்கு முடிவு

சசகெச்சுவான், ஏப்ரல் 20

கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னர் காணாமல் போன பெண் ஒருவரை சசகெட்டூனில் உள்ள மண் மேட்டில் தேடுவதற்கு பொலிஸார் திட்டமிட்டுள்ளனர்.

2020ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் மெக்கென்சி லீ டுரொட்டியர் என்ற பெண்மணி காணாமல் போனார்.

கடந்த நான்கு வருடங்களாக முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், சசக்கெட்டூன் மண் மேட்டின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஆதாரங்கள் கிடைத்துள்ளன எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஒரு மீற்றர் ஆழமும், 930 கியூபிக் மீற்றர் பரப்பளவும் கொண்ட இடத்தில் இந்தத்தேடல்முன்னெடுக்கப்படவுள்ளது.

மத்திய பொலிஸார் மற்றும் கல்கரி பொலிஸாருடன் இணைந்து அடுத்த மாதம் முன்னெடுக்கப்படவுள்ள இந்த தேடல் நடவடிக்கை 33 நாள்களுக்குத் தொடரும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.





# ஆபிரிக்க லயன் சஃபாரிக்கு செல்லும் யோசனையை செனட் சபை நிராகரிப்பு

ஒன்ராரியோ, ஏப்ரல் 19

ஹெமில்டனுக்கு அருகில் ஆபிரிக்க லயன் சஃபாரிக்கு யானைகளை காண்பதற்கு முன்மொழியப்பட்ட விஜயத்தை செனட் சபை உறுப்பினர்கள் நிராகரித்துள்ளனர்.

இந்த விஜயம் மக்களின் வரிப்பணத்திற்கு தேவையற்ற செலவு என செனட் சபை உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆபிரிக்க லயன் சஃபாரி எனப்படும் மிருகக்காட்சி சாலையில் விலங்குகள் நடத்தப்படும் விதம் தொடர்பில் எழுப்பப்பட்ட முறைப்பாடுகளை அடுத்து, அதனை முழுமையாக மூடுவதற்கான சட்டமூலம் ஒன்று செனட் சபையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்த சட்டமூலம் தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்கு முன்னர் குறித்த மிருகக்காட்சி சாலைக்கு விஜயம் செய்வதே பொருத்தமானது என கன்சர்வேட்டிவ் கட்சியின் செனட் தலைவர் டொன் பிளௌட் தெரிவித்துள்ளார்.

கன்சர்வேட்டிவ் செனட் உறுப்பினர்களால் முன்மொழியப்பட்ட இந்த விஜயத்திற்கு 50,000 டொலர்கள் வரை செலவாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# பொதுப் போக்குவரத்து 22 ஆம் திகதி பாதிப்பு?

ஒன்ராரியோ,ஏப்ரல் 20

ஏப்ரல் 22ஆம் திகதி பொதுப் போக்குவரத்து சேவைகள் பாதிக்கக் கூடிய வாய்ப்புகள் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

650இற்கு மேற்பட்ட இலத்திரனியல் மற்றும் வர்த்தகப் பணியாளர்கள் உள்ளடங்கிய தொழிற்சங்கம் ஒன்று ஏப்ரல் 22ஆம் திகதி வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக தெரிவித்துள்ளது.

எனினும், வார இறுதியில் தொழிற்சங்கத்துடன் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் இடம்பெறவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது. ரி.ரி.சி. வெளியிட்டுள்ள அறிக்கை யில் வேலை நிறுத்தப் போராட்டத்தை தவிர்ப்பதற்கு முயற்சி எடுப்பதாக குறிப்பிட்டுள்ளது.